# கோலாலம்பூரில் திடீர் வெள்ளம் ஏற்படக்கூடிய 14 இடங்கள் அடையாளம்



கோலாலம்பூர், ஆக. 25- கோலாலம்பூர் சுற்று வட்டாரத்தில் திடீர் வெள்ளம் ஏற்படக்கூடிய மேலும் 14 பகுதிகளை கோலாலம்பூர் மாநகராண்மைக் கழகம் கண்டறிந்துள்ளது.

இப்பிரச்சனையை எதிர்கொள்ள, நிவாரண திட்டங்களை விரைவுபடுத்துதல் உட்பட உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ மைமுனா முஹமட் ஷாரிஃப் தெரிவித்தார்.

ஜாலான் லைய்ட் புத்ரா,ஜாலான் பீல், ஜாலான் டூத்தாமாஸ், ஜாலான் பகாங், ஜாலான் மாஹாராஜா லேலா, ஜாலான் ராஜா சூலான், ஜாலான் கெந்திங் கிளாங், லோரோங் தித்திவங்சா 11, ஜாலான் பகாங் பாராட், ஜாலான் துன் ரசாக் ஆகிய பகுதிகள் திடீர் வெள்ளம் ஏற்படும் பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

இதற்கு முன்பு, திடீர் வெள்ளம் ஏற்படக்கூடிய 25 பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அதே நடவடிக்கைகள் மூலம் இத்தாக்கத்தை சமாளிக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.